**<u>In the court of the Additional Subordinate Judge, Tenkasi.</u>**

<u>Deposition of Witness</u>

Mcop 228/2022 c/w Mcop 230/22

ம.சா4 மருத்துவர் தர்மராஜ்

| | |
|---|---|
| Name | : தர்மராஜ் |
| Father's name | : |
| Village | : |
| Taluk | : |
| Occupation | : |
| Age | : |
| Date | : 26.11.2025 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை

நான் தற்போது ஆவுடையானூர் சி ஜே மருத்துவமனை என்ற பெயரில் மருத்துவமனை நடத்தி வருகிறேன். 5.12.2021 அன்று அதிகாலை 2.20 மணியளவில் 40 வயதுடைய அருணாச்சலம், த/பெ.சுடலையாண்டி, கீரைத்தோட்டம் , கீழப்பாவூர் ஊரை சேர்ந்தவர் எனது மருத்துவமனைக்கு வந்திருந்தார். அவர் கடந்த 4.12.2021 தேதியில் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்த போதுஎம்.எஸ்.யூனிவர்ஸ்சிட்டி அருகில் எதிரே வந்த நான்கு சக்கர வாகனத்தில் மோதி காயம்பட்டதாகவும், அதன் பின் அவர் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டதாகவும் அங்கு அவரது காலில் ஏற்பட்ட காயத்திற்கு மாவுகட்டு போட்டு வைத்தியம் செய்ததாகவும் அந்த வலதுகாலில் உள்ள மாவுகட்டுடன் எனது மருத்துவமனைக்கு வந்திருந்தார். அவருக்கு காலில் நுண்கதிர் படம் எடுத்து பார்த்த போது காலில் உள்ள இரு எலும்புகளும் முறிந்திருந்தது. அவருக்கு 5.12.2021 அன்று இரவு அறுவை சிகிச்சை செய்து அவருடைய முறிந்த எலும்பிற்கு ராடு மற்றும் ஸ்குரு போட்டு காலை சரிசெய்தேன். அதன்பிறகு அவர் 9.12.2021 வரை என் மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்து 10.12.2021 அன்று சிகிச்சையில்

இருந்து விடுவிக்கப்பட்டார். அதன்பிறகு அவர் என்னுடைய மருத்துவமனைக்கு 12.01.2022, 02.2.2022, 2.3.2022, 4.4.2022, 4.5.2022, ஆகிய தேதிகளில் வெளிநோயாளியாக வந்திருந்தார். அப்போது அவருக்கு டைமனிசேஷன் என்ற ஒரு அறுவை சிகிச்சை செய்து அவருடைய காலில் உள்ள ஒரு ஸ்குருவை எடுத்தேன். அதன்பிறகு அவர் 15.6.2022, 20.8.2022, 2.10.2022, 14.12.2022, ஆகிய தேதிகளில் வெளிநோயளியாக வந்திருந்தார். அவர் காலில் உள்ள ராடை 24.12.2022 அன்று அறுவைசிகிச்சை செய்து அப்புறப்படுத்தினேன். சுமை தூக்கும் தொழிலாளராக காயம்பட்ட நபர் இருந்து வந்தாலும் அவர் தொடர்ந்து அந்த வேலையை செய்ய முடியுமா என்பது பற்றி அவரை தற்போது பரிசோதனை செய்தால் மட்டும் தான் சொல்ல முடியும். வேறு மருத்துவமனையில் தற்போது சிகிச்சை எடுத்து வருகிறார் என்பது பற்றி எனக்கு தெரியாது.

3 ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் காயம்பட்ட நபர் வேறு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டதாக குறிப்புகளை காண்பித்தார என்றால் காண்பிக்கவில்லை. விபத்தில் காயம்பட்ட நபர் மாவு கட்டுடன் வந்திருந்தார். 2022 க்கு பின்னர் காயம்பட்ட நபர் தொடர் சிகிச்சைக்கு வந்தாரா என்றால் இல்லை. என்னுடைய ஆலோசனையின் பேரில் தான் உள்நோயாளியாக இருந்து மனுதாரர் விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். 24.12.2022 க்கு பிறகு மனுதாரரின் காயங்கள் குணமடைந்து நன்றாக உள்ளார். தற்போது மனுதாரருக்கு திறன் இழப்பு எத்தனை சதவிதம் இருக்கும் என்றால் அவரை பார்த்தால்தான் தெரியும்.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.

-